துணை ஆணையர் (மாவ), சரகம்-8, சென்னை-6 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.செ.கார்த்திக்,

இடம்:- பே.அ.ப.வி.நி. கட்டிடம், 3-வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-6.

ந.க. 3274 /2017/அ 1

நாள். 11. 12. 2018.

பொருள்:- பொதுப்பணிகள் - வணிக வரித்துறை - சென்னை (கிழக்கு) கோட்டம் - துணை ஆணையர் (மாவ), சரகம் - 8, சென்னை -6 - தட்டச்சர் பணி - அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2015-2016 நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணியில் சேர்ந்த தட்டச்சர்கள் - பணி வரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:-

1. அரசு ஆணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.22.07.2008.
2. அரசு ஆணை எண் 43, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.17.04.2009.
3. செயலர் /தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.5658/ PSD - A2/2017, நாள்.03.10.2017.
4. இணை ஆணையர் (மாவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை -06 அவர்களின் கடித எண்.4560/2017/அ2, நாள்.31.10.2017.
5. துணை ஆணையர் (மாவ), சரகம் -8, சென்னை -06 அவர்களின் கடித எண்.3274/2017/அ1, நாள்.06.11.2017.

******************

ஆணை:-

பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-2016- ம் ஆண்டு தொகுதி-IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை - 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (மாவ), சென்னை (கிழக்கு) கோட்டம் அவர்கள் இச்சரகத்திற்கு பணி நியமன ஆணையின் பொருட்டு

ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி கீழ்கண்ட தட்டச்சர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள்.

| வ.எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | S.S. கார்த்திகேயன் தட்டச்சர் | உதவி ஆணையர் (மாவ), சோழிங்கநல்லூர் வரிவிதிப்பு வட்டம். | 14.11.2017 மு.ப. | 14.11.2017 மு.ப. |
| 2. | A. பார்த்திபன் தட்டச்சர் | உதவி ஆணையர் (மாவ), ஆலந்தூர் வரிவிதிப்பு வட்டம். | 13.11.2017 மு.ப. | 13.11.2017 மு.ப. |
| 3. | லோ.கலைச்செல்வி தட்டச்சர் | துணை ஆணையர் (மாவ), சரகம் - 8, சென்னை -06. | 13.11.2017 மு.ப. | 13.11.2017 மு.ப. |

2. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34(a) மற்றும் அதனுடன் கூடிய பிற்சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ளபடி, தட்டச்சர் தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3. மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பெறும் தொழில் நுட்பத் தேர்வான கணினிவழி அலுவலக தன்னியக்க முறை (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுதல் வேண்டும். மேலும் தகுதிகாண் பருவ காலத்தில் பணி மனநிறைவு தரும் வகையில் அமைதல் மிகவும் அவசியம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

பணிவரன்முறை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி -IV - 2015-2016 வரையிலான காலத்தில் உள்ள பணிநியமனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் சென்னை / மதுரை கிளையில் நிலுவையிலுள்ள மேல்முறையீட்டு கோப்புகள் வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது என்பதையும் அறியவும்.

ஒம்/- செ. கார்த்திக்,
துணை ஆணையர் (மாவ),
சரகம் - 8, சென்னை -06.

பெறுநர்
தட்டச்சர்கள்
சம்பந்தப்பட்ட உதவி ஆணையர்கள் (மாவ), அலுவலகம் மூலமாக

நகல் - தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3.
2. இணை ஆணையர் (மாவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை - 6.
3. இணை ஆணையர் (மாவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6
4. உதவி ஆணையர் (மாவ), சோழிங்கநல்லூர், ஆலந்தூர் வரிவிதிப்பு வட்டங்கள்.
உபரி - 2.

// உண்மை நகல் //

அலுவலர் 11/12/18

வணிக வரி அலுவலர் / மேலாளர்.

11/12/18